සියලුම හිමිකම් ඇවිරිණි/ முழுப் பதிப்புரிமையுடையது / All Rights reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

தரம் 06 | முதலாம் தவணைப் பரீட்சை - 2019 | 32 T

சுட்டெண் .........................................


# கணிதம்

நேரம் 2 மணித்தியாலம்

## பகுதி I

- **எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.**

01. இவ்வுருவில் எத்தனை வட்டங்கள் காணப்படுகின்றன?



02. 2389, இங்கு 2 வகைக்குறிக்கும் பெறுமானம் எவ்வளவு?

03. ரூபா. 12.00 பெறுமதியுள்ள பென்சில் ஒன்றை வாங்குவதற்கு நூறு ரூபாய் தாளைக் கொடுக்கும் மதனுக்கு எவ்வளவு மீதி கிடைக்கும்?

04. 34 மணித்தியாலங்கள் என்பதனை நாள் மற்றும் மணித்தியாலங்களில் காட்டுக.

05. 8, 230, 072, 500 எனும் எண்ணின் ஆயிரம் வலயத்திற்குரிய இலக்கங்களை எழுதுக.

06. பெறுமானம் காண்க.
$13 + 2003$


07. இடைவெளிகளில் பொருத்தமான இலக்கங்களை எழுதுக.

| | | |
|---|---|---|
| | ☐ | 8 |
| | x | 6 |
| 2 | 2 | ☐ |

08. சமனான காலங்களைக் காட்டும் சோடிகளை இணைக்குக.

| | |
|---|---|
| 100 வினாடிகள் | 1 நாள் |
| 3 நாட்கள் | 1 நிமிடம் 40 வினாடிகள் |
| 24 நிமிடங்கள் | 72 மணித்தியாலங்கள் |
| 24 மணித்தியாலங்கள் | |


09.




(i) இவ்வெண்கோட்டில் குறிக்கப்பட்டுள்ள எண் யாது?


(ii) இவ்வெண்கோட்டில் 1 எனும் எண்ணை குறித்துக் காட்டுக.

10. இரு எண்களை எண்சட்டங்களின் மூலம் கூட்டும் முறை படத்தில் தரப்பட்டுள்ளது. மொத்தத்தினை உரிய எண்சட்டத்தில் காட்டுக.




11. -2 க்கும் 1 க்கும் இடையிலுள்ள எல்லா முழு எண்களையும் எழுதுக.

12. படத்தில் காட்டப்பட்டுள்ள கோணம் எவ்வகையான கோணம் என எழுதுக.



13. 75 இனை கிட்டிய 10 இன் மடங்கிற்கு மட்டந்தட்டுக.

14. -3, 2, -2 ஆகியவற்றில் பொருத்தமான எண்ணைக்கொண்டு இடைவெளி நிரப்புக.

-2 < ................

---

15. கி.பி 2019 ஏப்பிரல் ஒன்று என்பதை நியம முறையில் எழுதுக.

---

16. தரப்பட்டுள்ள எண்கோட்டில் குறிக்கப்பட்டுள்ள எண்களை ஏறுவரிசையில் எழுதுக.




---

17. 6 > 2 எனும் சமனிலியை சொற்களில் விபரிக்க.

---

18. கீழே தரப்பட்டுள்ளவற்றில் வட்டவடிவம் காணப்படும் பொருட்கள் இரண்டை தெரிந்து எழுதுக.
செமண்டின், கனவுருப் பெட்டி, ஆசிரியர் மேசை, 5 ரூபா நாணயம்

---

19. கீழே அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளவற்றைக் கொண்டு இடைவெளி நிரப்புக.

பாடசாலைக் கட்டமொன்றின் நிலம் ............................... (கிடை/ நிலைக்குத்து) தளமாகும்.

அக்கட்டடத்தின் சுவர் ................................ (கிடை/ நிலைக்குத்து) தளமாகும்.

---


20. வடதிசையிலிருந்து இடஞ்சுழியாக உள்ள செங்கோணத்தை இரு சம பங்குகளாக பிரிக்கும் திசை என்ன திசையாகும்.

### பகுதி I

- **முதலாம் வினாவிற்கும் ஏனைய நான்கு வினாக்களுக்கும் விடையளிக்க.**
- **முதலாம் வினாவிற்கு 16 புள்ளிகளும் ஏனைய வினாக்களுக்கு 11 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.**

---


01. A) தரம் 6 மாணவர் குழுவொன்று திசைகள் பாடத்திற்காக செய்த செயல்பாடொன்றின் பொருட்டு வரைந்த வரைபடம் கீழே காட்டப்பட்டுள்ளது.




மேற்படி வரைபடத்திலிருந்து கீழே தரப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க.


1. அலுவலகம் சிற்றுண்டிச்சாலைக்கு என்ன திசையில் அமைந்துள்ளது?
2. சிற்றுண்டிச்சாலைக்கு வடகிழக்கு திசையில் அமைந்திருப்பது எது?
3. அறை எண் 01 அமைந்திருப்பது அறை 02 இற்கு என்ன திசையில்?
4. நுழைவாயிலிருந்து தென் திசையில் அமைந்திருப்பது எது?
5. சிற்றுண்டிச்சாலை அமைந்துள்ள இடத்தில் வடக்கு திசையை நோக்கி நின்று கொண்டிருக்கும் சலீம் தென்திசையை நோக்கி திரும்ப வேண்டுமெனின் அவன் திரும்பவேண்டிய கோணம் எவ்வகை கோணமாகும்?

B) தரப்பட்டுள்ள உருவில் வெவ்வேறு கோணங்கள் A யிலிருந்து h வரை பெயரிடப்பட்டுள்ளன. இதிலிருந்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடைஅயிக்க.




1. கூர்க்கோணங்கள் இரண்டைப் பெயரிடுக.
2. f இனால் பெயரிடப்பட்டுள்ளது எவ்வகை கோணமாகும்.
3. விரிகோணங்கள் இரண்டைப் பெயரிடுக.
4. a எவ்வகையான கோணமாகும்.

02. A) குறித்த நாளொன்றில் மு.ப. 6.00 மணிக்கு உலகின் பல்வேறு நகரங்களில் நிலவிய வெப்பநிலை கீழே எண்கோட்டில் செல்சியஸ் பாகையில் காட்டப்பட்டுள்ளன.




1. ஆகக்கூடிய வெப்பநிலை காணப்பட்ட நகரம் எது?
2. ஆகக் குறைந்த வெப்பநிலை காணப்பட்ட நகரம் எது?
3. மேற்படி நகரங்களின் வெப்பநிலைகளை இறங்குவரிசையில் எழுதுக.
4. பரிஸ் நகரின் வெப்பநிலையை விட குறைந்த வெப்பநிலையுடைய நகரங்கள் யாவை?
5. லண்டன் நகரின் வெப்பநிலை புதுடெல்லி நகரின் வெப்பநிலையை விட எத்தனை பாகைகள் குறைவு?

---

03. கணித செயற்பாடு ஒன்றிற்கான ஓரிலக்கத்தைக் கொண்ட அட்டைகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 4 | 9 | 9 | 7 | 6 | 5 |

a) மேலேயுள்ள எல்லா அட்டைகளையும் கொண்டு உருவாக்கக்கூடிய மிகப்பெரிய எண்ணை அடிப்படையாகக் கொண்டு,

1. எண்ணை நியம வடிவில் எழுதுக.
2. இவ்வெண்ணை சொற்களில் எழுதுக.
3. அவ்வெண்ணில் 4 வகைக்குறிக்கும் பெறுமானம் யாது?

b) 1. இவ்வட்டைகளைக் கொண்டு தயாரிக்ககூடிய மிகச்சிறிய எண்ணை எழுதிக்காட்டுக.

2. நீர் எழுதிய எண்ணில் பத்தினிடத்து இலக்கத்தின் பெறுமானம் ஒன்றினடத்து இலக்கத்தின் பெறுமானத்தை விட எத்தனை மடங்கு?

---

04. a) சுருக்குக.

1. $2138 + 794$
2. $5000 - 2357$
3. $76 \times 24$
4. $24300 \div 100$

b) நெடும் வகுத்தல் முறையைப் பயன்படுத்தி சுருக்குக.

$6570 \div 18$

05. A) மு.ப. 10.35 க்கு கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து புறப்பட்ட புகையிரதமொன்றுக்கு குருணாகல் வந்தடைய 1 மணித்தியாலம் 55 நிமிடங்கள் எடுத்ததுடன் அங்கிருந்து அநுராதபுரம் செல்ல இன்னும் 2 மணித்தியாலம் 30 நிமிடம் தேவைப்பட்டது.

1. புகையிரதம் கொழும்பிலிருந்து அநுராதபுரம் செல்ல எடுத்த மொத்த நேரத்தை மணித்தியாலம் மற்றும் நிமிடங்களில் காட்டுக.

2. புகையிரதம் அநுராதபுரத்தை அடைந்த நேரத்தை நியம முறையில் எழுதுக.

3. புகையிரதத்திற்கு குருணாகலிலிருந்து அநுராதபுரம் செல்ல எடுத்த காலம் கொழும்பிலிருந்து குருணாகலிற்கு செல்ல எடுத்த காலத்தை விட எவ்வளவு அதிகம்?

B) கூட்டுக.

| | நாள் | மணி |
|---|---|---|
| | 8 | 13 |
| + | 1 | 12 |
| | | |

---

06. A) கீழே தரப்பட்டுள்ள எண்களை கிட்டிய 10 இன் மடங்குக்கு மட்டந்தட்டுக.

1. 32

2. 47

3. 65

B) கிராமமொன்றில் உள்ள வீடுகளின் எண்ணிக்கையை கிட்டிய 10 இன் மடங்குக்கு மட்டந்தட்டிய போது 50 பெறப்பட்டது. கிராமத்தில் உள்ள,

1. ஆகக்குறைந்த வீடுகளின் எண்ணிக்கை யாது?

2. ஆகக்கூடிய வீடுகளின் எண்ணிக்கை யாது?

C) நாளாந்த வாழ்க்கையில் மதிப்பிடல் இடம்பெறும் சந்தர்ப்பம் ஒன்றை கூறுக.



---

07. விருந்தொன்றின் செலவு விபரங்களைக் கொண்ட அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது. அதனை பிரதி செய்து இடைவெளி நிரப்புக.

| தேவையான பொருட்கள் | தேவையான அளவு | அலகொன்றின் விலை (ரூ) | விலை (ரூ) |
|---|---|---|---|
| கட்லட் | 100 | 12.00 | .................. |
| வாழைப்பழம் | 200 | 8.00 | .................. |
| கேக் | 2 kg 500g | 380.00 | .................. |
| சீனி | 2 kg 250g | 100.00 | .................. |
| பால்மா பக்கட் | 3 | 350.00 | .................. |
| | | | .................. |

**வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்**
**முதலாம் தவணைப் பரீட்சை - 2019**
**தரம் 06 - கணிதம் (32)**
**விடைப்பத்திரம்**

## பகுதி I

| வினா. இல | விடைகள் | புள்ளி | வினா. இல | விடைகள் | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | 4 | 02 | 16 | -3, -1, 0, 2 | 02 |
| 2 | 2000 | 02 | 17 | 6 பெரிது 2 இலும் | 02 |
| 3 | ரூ. 100 - 12<br>= ரூ. 88 | 01<br>01 | 18 | செமன்டின், 5 ரூபா நாணயம் | 01<br>01 |
| 4 | ஒரு நாள் 10 மணி | 02 | 19 | கிடை<br>நிலைக்குத்து | 01<br>01 |
| 5 | 0, 7, 2 | 02 | 20 | வடமேல் | 02 |
| 6 | 2016 | 02 | | | |
| 7 | 3 8<br>22 8 | 01<br>01 | | | |
| 8 | விநாடி 100 — 1 நாள்<br>24 மணி — 1 நிமிடம் 40 விநாடி | 01<br>01 | | | |
| 9 | -2<br> | 01<br>02 | | | |
| 10 |  | 02 | | | |
| 11 | -1, 0 | 01<br>01 | | | |
| 12 | நேர் கோணம் | 01 | | | |
| 13 | 80 | 02 | | | |
| 14 | 2 | 02 | | | |
| 15 | 2019.04.01 | 02 | | | |

**வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்**
**முதலாம் தவணைப் பரீட்சை - 2019**
**தரம் 06 - கணிதம் (32)**
**விடைப்பத்திரம்**

**பகுதி II**

| வினா. இல | விடைகள் | புள்ளி | |
|---|---|---|---|
| 01. | (a) I) வடக்கு | 01 | |
| | ii அலுவலகம், நுழைவாயில் | 01 | |
| | iii வடமேல் | 01 | |
| | iv அலுவலகம் | 01 | |
| | சிற்றுண்டிச்சாலை | 01 | |
| | அறை இல 02 | 01 | |
| | v. நேர்கோணம் | 02 | |
| | (b) i. g, c | 02 | |
| | ii. பின்வளைகோணம் | 02 | |
| | iii. b,e,d ஏதாவது இரண்டு | 02 | |
| | iv. செங்கோணம் | 02 | 16 |
| 02. | I. புதுடெல்லி | 02 | |
| | ii. லண்டன் | 02 | |
| | iii. 5,2,0,-2,-3 | 03 | |
| | iv. லண்டன், பீஜிங் | 02 | |
| | v. 8 | 02 | 11 |
| 03. | (a) i. 99 765 431 | 03 | |
| | ii. தொண்ணூற்றொன்பது மில்லியன் எழுநூற்று அறுபத்தையாயிரத்து நாநூற்று முப்பத்தொன்று | 03 | |
| | iii. 400 | 02 | |
| | (b) i. 13 456 799 | 01 | |
| | ii. 10 மடங்கு | 02 | 11 |
| 04. | (a) i. 2932 | 02 | |
| | ii. 2643 | 02 | |
| | iii. 76<br>x 24 | | |
| | 304 | 01 | |
| | 1520 | 01 | |
| | 1824 | 01 | |
| | iv. 243 | 01 | |
| | (b) 18 ) 6570 ( 365<br>54<br>117<br>108<br>90<br>90<br>0 | 03 | 11 |
| 05. | (a) i. மணி நிமிடம்<br>1 55 கூட்டலைக் காட்டுவதற்கு | 01 | |
| | + 2 30<br>4 25 | 02 | |
| | ii. 15: 00 | 02 | |
| | iii. 2 30<br>- 1 55 கழித்தலை காட்ட | 01 | |
| | 0 35 | 02 | |
| | (b) 10 நாள் ஒரு மணித்தியாலம் | 03 | 11 |
| 06. | (a) i. 30 | 02 | |
| | ii. 50 | 02 | |
| | iii. 70 | 02 | |
| | (b) i. 45 | 02 | |
| | ii. 54 | 02 | |
| | (c) சரியான விடைக்கு | 01 | 11 |
| 07. | விலை (ரூ) | | |
| | 1200.00 | 01 | |
| | 1600.00 | 01 | |
| | 950.00 | 03 | |
| | 225.00 | 03 | |
| | 1050.00 | 01 | |
| | மொ. செலவு 5025.00 | 02 | 11 |